[2nd February 1963

திரு. டி. கார்ச்சா கவுடர் : பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்கள் கட்டுவது கிராமப் புறங்களிலே அல்லாமல் நகரப்புறங்களிலே தான் கட்டப்பட்டுவருகின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அந்தக் கட்டிடங்களை கிராமங்களிலே கட்டுவதற்கு உத்திரவு போடுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்கள் நடுஸ்தலமாக இருக்க வேண்டும். அதனால்தான் நகரங்களிலே கட்டப்பட்டு வருகின்றன.

Jails (Overcrowding)

* 43 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was any overcrowding in jails in July 1962; and

(*b*) if so, the action taken in the matter?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, except in the Central Jail, Salem and the District Jail, Pudukkottai.

(*b*) All available spare space inside the jails, such as Civil Debtor Yards, workshops, out-quarantine, etc., were used to accommodate prisoners. In Madras Central Jail, they were accommodated in the open enclosures with sentries at the locked gates. In the case of the Sub-Jails, surplus prisoners were transferred to the nearest Central Jail.

(அ) சேலம் மத்திய சிறை, புதுக்கோட்டை மாவட்டச் சிறை ஆகியவை நீங்கலாக ஏனைய சிறைகள் எல்லாவற்றிலும் கைதிகள் அளவுக்கு மேல் இருந்தனர்.

(ஆ) சிறைகளில் காலியாயிருந்த எல்லா இடத்திலும் அதாவது சிவில் கடனாளிகளை அடைத்து வைக்கும் இடம், வேலைப் பட்டறைகள், குவாரன்டைன் யார்டு போன்ற இடங்களில் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டனர். சென்னை மத்திய சிறையில் இவர்கள் திறந்த வெளி அடைப்பில் அடைத்து வைக்கப்பட்டனர். இந்த அடைப்பின் கதவுகளுக்கு வெளியே காவலாளிகள் போடப்பட்டனர். சப்-ஜெயில்களைப் பொறுத்த வரையில் அதிகப்படியான கைதிகள் அருகிலுள்ள மத்திய சிறைக்கு மாற்றப்பட்டனர்.

* 44 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a tin shed is used for locking up the prisoners in Pudukottai Jail; and

(*b*) if so, the capacity of that shed?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No Sir.

(*b*) Does not arise.